# நடப்பு நிகழ்வுகள்- நவம்பர் 17 - 2018

- இந்தியாவில் முதல் முறையாக உயிரி எரிபொருள் மூலம் இயங்கும் விமானம் **டேராடூனில் இருந்து டெல்லிக்கு** ஸ்பைஸ் ஜெட் விமான நிறுவனம் இயக்கியுள்ளது.

- **INS அரிஹந்த்** நீர் மூழ்கி கப்பலில் இருந்து அணு ஆயுதத்தை சுமந்து சென்று தாக்கும் அதிநவீன ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

- புதுடில்லியில் வன அழிவு, வனததரக் குறைவு ஆகியவற்றால் ஏற்படும் கார்பன் டை ஆக்ஸைடு வெளியீட்டை குறைப்பதற்கான நடவடிக்கைகள் என பொருள்படும் **ரெட் பிளஸ்** தேசிய அணுகுமுறை திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- உலகின் மிகப்பெரிய தொலைநோக்கியாக அமையும் **ஜெயண்ட் மெக்கல்லன்** டெலஸ்கோப் வருகிற 2024ஆம் ஆண்டு முதல் தொடங்கும்.

- சந்திரனின் இரு துருவ பகுதிகளிலும் தண்ணீர் இருப்பதற்கு நேரடி ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக நாசா அறிவித்துள்ளது.

OXFORD IAS ACADEMY

❖ முதலீடுகளை ஈர்ப்பதில் உலகின் மிகப்பெரிய பொருளாதார மையமாக **நியூயார்க் நகரம்** திகழ்கின்றது.

❖ தென் கொரியாவின் **சாங்வான் நகரில்** உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்றது. இதில் ஆடவருக்கான 50 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் ஓம் பிரகாஷ் மிதர்வாஸ் தங்க பதக்கம் வென்றார்.

❖ தென் கொரியாவில் உள்ள **சியோஸ் நகரில்** 5-வது **கேரம் உலகக் கோப்பை தொடர்** நடைபெற்றது.

❖ அமெரிக்காவின் பென்டகனில் நடந்த விருது வழங்கும் விழாவில் இந்திய இராணுவ படைத்தளபதி **தல்பீர் சிங் சுகாக்கிற்கு** அமெரிக்காவின் மிக உயரிய விருதான **Legion of merit** விருது வழங்கப்பட்டது.

❖ 2018 ஆண்டுகளுக்கான இந்தியில் வெளிவந்த இந்தியாவின் சிறந்த புத்தகம் விருதை **“நாகபானி வன்கா இதிகாஸ்”** என்ற புத்தகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் வைரமுத்து எழுதிய கள்ளிக்காட்டு இதிகாசம் என்ற புதினத்தின் மொழிபெயர்ப்பு ஆகும்.

❖ 2018 ஆண்டிற்கான டாக்டர் பி.சி.ராய் தேசிய விருதுக்கு **டாக்டர் பசந்த் குமார் மிஸ்ரா** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.